**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 06.10.2025**

**OS.152/2020**

**வா.சா. 1 திரு.இளங்கோவன்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் அச்சல்வாடியில் எத்தனை வருடமாக வசித்து வருகிறேன் என்றால் நான் அங்கு வசிக்கவில்லை, நான் அரூரில் உள்ள PWD குடியிருப்பில் 12 வருடமாக வசித்து வருகிறேன். எதற்காக பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நிலத்தில் அவர்கள் அத்துமீறி நுழைந்து அராஜகம் செய்கிறார்கள் அதற்காக வழக்கு போட்டுள்ளேன். அவ்வாறு அத்துமீறி நுழைந்து அராஜகம் செய்யும் நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் 40/6C, 40/6B. இந்த நிலத்திற்கு செக்குபந்தி தெரியுமா என்றால் கிழக்கே பஞ்சாயத்து ரோடு, மேற்கே – மூக்கனூர் பட்டி எல்லை, தெற்கே – எனது அண்ணன் அருணாசலத்திற்கு பாத்தியப்பட்ட நிலம், வடக்கே – வெள்ளையப்ப கவுண்டர் நிலமும், கோபால் கவுண்டர் என்பவருடைய கிணறும் உள்ளது, அதே பக்கம் கொங்கன் என்பவர் நிலமும் உள்ளது.

2. வெள்ளையப்ப கவுண்டர் என்பவர் பிரதிவாதிகளின் அப்பா என்றால் சரிதான். எனது அப்பா பெயர் அண்ணாமலை கவுண்டர் என்றால் சரிதான். அண்ணாமலை கவுண்டர் என்பவரும், வெள்ளையப்ப கவுண்டர்

என்பவரும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். தாவா சொத்தானது எனது தாத்தா சம்பாதித்த சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என்னுடைய அப்பா அண்ணாமலைக்கவுண்டர், பிரதிவாதிகளுக்கு எதிராகவும் OS.202/1996 என்ற வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு எனது அப்பாவுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்புக்கு எதிராக தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் AS.91/2003 என பிரதிவாதிகளும் அவரது தந்தையும் மேல்முறையீடு செய்தார்கள் அந்த வழக்கும் எனது தந்தைக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கான ஆவணம் நான் ஏற்கனவே இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் அது என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். மேற்படி AS.91/2003 என்ற வழக்கின் பிறப்பு பிரதிவாதியும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து SA.No.1859/2004 என கோப்பில் எடுக்கப்பட்டு 24.02.2020–ம் தேதியில் AS.No.91/2003, OS.202/1996 ஆகிய இருதீர்ப்புகளும் ரத்துசெய்யப்பட்டு, அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.202/1996 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது, பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்று சொல்வது தவறானது சென்னை உயர்நீதிமன்றத்தில் இருந்து மேல்முறையீட்டில் நானும் ஒரு தரப்பினராக இருந்து வழக்கு நடத்தியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை.

3. தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் அது எவ்வாறு பாத்தியம் என்றால் தாவா சொத்து எனது அப்பாவிற்கும் பிரதிவாதிகள் அப்பாவிற்கும் பாத்தியப்பட்டு பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் அதன்படி எனது அப்பாவிற்கு பாத்தியம் அதன்பின் நானும் எனது அண்ணனும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம், அதன்படி தாவா சொத்து எனக்கு பாகமாக வந்தது, அதன்படி எனக்கு பாத்தியம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1, 11.03.2020 –ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி எனக்கு பாத்தியப்பட்டதாக கூறுகிறேன் என்றால் ஆமாம். சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண். SA.No.1859/2004 வழக்கில் 24.02.2020–ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு சார்பாக தீர்ப்பு வந்துவிட்டதை அறிந்து 11.03.2020–ம் தேதியில் மோசடியான பாகப்பிரிவினை ஒன்று நான் எனது அப்பா, எனது அண்ணன் சேர்ந்து செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து நாங்கள் எதுவும் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. எனக்கு, எனது அண்ணன் ஆகியோர் சேர்த்து எங்கள் குடும்பத்திற்கு எவ்வளவு பாகம் வந்தது என்று சொன்னால் மொசப்பட்டியில் 2.50 ஏக்கரில் இருந்து 3.00 ஏக்கர் வரையிலும், மூக்கனூர் பட்டியில் 3.00 ஏக்கர் முதல் 3.50 ஏக்கர் நிலம் பாகமாக வந்தது. சுமார் ஆறரை ஏக்கர் நிலம் எனது அப்பாவிற்கு பாகமாக வந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி ஒன்றரை ஏக்கர் நிலம் மட்டும் தான் பாகப்பிரிவினை செய்து கொண்டோம்

மீதி நிலம் பாகப்பிரிவினை செய்யப்படவில்லையா என்றால் அனைத்தையும் பாகப்பிரிவினை செய்துகொண்டோம், மூக்கனூர்பட்டியில் உள்ள நிலத்தை நாங்கள் பாகப்பிரிவினை செய்யவில்லை. வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து வழக்கில் உள்ளது என்பதால் மட்டும் நாங்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டோமா என்றால் அவ்வாறு இல்லை, மூக்கனூர் பட்டியில் உள்ள நிலத்திற்கு இந்த நிலத்தின்வழியாக தான் செல்லவேண்டும் அதற்காக பாகப்பிரிவினை செய்துகொண்டோம். நாங்கள் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் மூக்கனூர் பட்டியில் உள்ள நிலத்திற்கு செல்லவேண்டும் என்ற தட வசதிக்காக தான் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் மீதி நிலத்தை பொறுத்தை பாகப்பிரிவினை செய்யவில்லை என்று அந்த பத்திரத்தில் குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 15.05.1995 தேதிய அரூர் வட்டாட்சியர் உத்தரவின்படி பட்டாவில் வெள்ளையகவுண்டர் பெயர் நீக்கி எனது தந்தை அண்ணாமலைக்கவுண்டர் பெயருக்கு பட்டா வழங்கினார்கள் என்று சொல்லியுள்ளேன், 1995ம் ஆண்டு வரை பிரதிவாதிகளின் தந்தை வெள்ளையகவுண்டர் பெயரில் தான் தாவா சொத்திற்கான பட்டா இருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் எனது அண்ணா இருவரும் அரசு ஊழியர்கள் என்று சொன்னால் நான் தினக்கூலி பணியாளர், எனது அண்ணா PWD ல் பணிஆய்வாளராக அரசு பணியில் உள்ளார். பிரதிவாதிகள் அனைவரும்

விவசாயம் செய்து வருகிறார்கள் அவர்கள் யாரும் அரசு பணியில் இல்லை என்றால் சரிதான்.

6. தாவா சொத்தில் அண்ணாதுரைதான் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை, நாங்கள் தான் குடியிருக்கிறோம். தாவா சொத்தில் உள்ள வீடு தார்சு வீடா என்றால் இல்லை, ஓட்டுவீடு அது கேரளா அட்டைபோட்டவீடு. அந்த வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. அந்த வீடு கட்டி 50 வருடம் ஆகியிருக்குமா என்றால் இல்லை, 1998ல் கட்டப்பட்ட வீடு. யார் அந்த வீட்டை கட்டியது என்றால் நான் தான் கட்டினேன். தாவா சொத்தில் வீடு உள்ளது, அதை நான் தான் கட்டியுள்ளேன் என்ற விவரம் எல்லாம் நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது எல்லாம் பொய்யானது, தாவா சொத்தில் உள்ள வீடு 50 வருடத்திற்கு முன்பு 1ம் பிரதிவாதியின் தந்தை வெள்ளையக்கவுண்டர் கட்டிய வீடு பின்னிட்டு அந்த சொத்து 1ம் பிரதிவாதி அண்ணாதுரைக்கு பாகமாக வந்து அந்த வீட்டில் 1ம் பிரதிவாதி அண்ணாதுரைதான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

7. அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எனது அப்பா அண்ணாமலை என்பவர் OS.No.202/1996 என்ற வழக்கு தாக்கல் செய்து அதில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் வழக்குசொத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்பித்துள்ளார் அதில் உள்ள வீட்டில் 1ம் பிரதிவாதி அண்ணாதுரை வசிப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டது உண்மை, அதில் வீடு உள்ளதாக

குறிப்பிட்டுள்ளார் ஆனால் அது அண்ணாதுரைக்கு பாத்தியப்பட்டது கிடையாது, எனக்கு பாத்தியப்பட்டது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து அதற்கு மின்இணைப்பும் பெற்று வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்திற்கான பட்டாவை எங்களது தனிப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி எனது அப்பா பெயருக்கு பட்டா மாற்றம் செய்துள்ளேன், அவ்வாறு பட்டா மாற்றம் செய்ததில் பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்தாலும் வழக்கு நிலுவையில் இருப்பதை குறிப்பிட்டு பிரதிவாதிகள் கொடுத்த மனு நிராகரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 15.05.1995 ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவில் எனது தந்தை அண்ணாமலை பெயரில் பட்டா மாறுதல் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது அத்ற்கான உத்தரவு தான் என்றால் சரிதான். **15.05.1995 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு நகல் பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எனது தந்தையார் பெயரில் கொடுத்த பட்டாவை ரத்து செய்யச்சொல்லி 08.10.1995 ல் தருமபுரி வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு மனு 06.08.1997 ம் தேதியில் எனது தந்தைக்கு வழங்கிய பட்டாமாறுதல் உத்தரவு அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.202/1996 வழக்கின் இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டதை காரணம் காட்டி வட்டாட்சியர் மேல்முறையீட்டு மனுவை நிராகரித்தும், எனது அப்பாவிற்கு வழங்கிய உறுதி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அந்த உத்தரவு என்னிடம் காட்டப்படுவது

தான் என்றால் சரிதான். **06.08.1997 ல் தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை நகல் பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு மேற்படி உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகளின் தந்தை 18.08.1997 ல் சீராய்வு மனு தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டு அந்த மனுவும் அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு 202/1996 வழக்கில் 11.06.1996 ல் IA.603/1996 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை காரணம் காட்டி சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டு நீதிமன்ற தீர்ப்புரையின் பெயரில் சம்மந்தப்பட்ட அலுவலருக்கு மனு செய்து கொள்ளும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அந்த உத்தரவு தான் என்னிடம் காட்டப்படும் உத்தரவின் நகல் என்று சொன்னால் சரிதான். **11.02.2002 தேதியிட்ட தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் நகல் பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே எனது தந்தையாரால், பிரதிவாதிகளின் தந்தை மீது வழக்கு தாக்கல் செய்து அதில் பிரதிவாதிகள் சார்பாக இறுதி தீர்ப்பு ஏற்பட்டு விட்டதால் முன் தீர்ப்பு தடையால் இந்த தாவா பாதிக்கப்பட்டுள்ளது அதனாலேயே இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் வசிக்காமல் தாவா சொத்தில் நான் வசிப்பதாக சொல்லி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இன்றுவரை 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார், மேற்படி சொத்தில் நான் வசிப்பதாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது தள்ளுபடி

செய்யக்கூடியது என்றால் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண். SA.No.1859/2004 வழக்கில் 24.02.2020–ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு சார்பாக தீர்ப்பு வந்துவிட்டதை அறிந்து 11.03.2020–ம் தேதியில் மோசடியான பாகப்பிரிவினை ஒன்று நான் எனது அப்பா, எனது அண்ணன் சேர்ந்து செய்துகொண்டு, தாவா சொத்திற்கு நான் தான் உரிமையாளர்என விளம்புகை செய்யகோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அறியாமையை பயன்படுத்தி, நாங்கள் அரசு பணியில் இருப்பதால் எங்களுடைய தனிப்பட்ட செல்வாக்கை பயன்படுத்தி பட்டா மாறுதல் செய்து கொண்டு அதன்பெயரில் ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன், இந்த வழக்கு தள்ளுபடிசெய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் அனுபவத்தில் இல்லாத சொத்தில் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் தாவாவில்கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.06 16:02:18 +0530